# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரம் மற்றும் சாதாரணக்கூட்ட அழைப்பிதழ்

# கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற அவசரம் மற்றும் சாதாரணக்கூட்டம் வருகின்ற 23.06.2026 **செவ்வாய்கிழமை காலை** 11.00 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி புதிய அலுவலகத்தில் உள்ள **திரு.கோசி.மணி மாமன்ற வளாகத்தில்** உள்ள **திரு.இரா.துரை மாமன்ற** கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இடம் : கும்பகோணம்**
**நாள் :** 19.06.2026

**மேயர்**
**கும்பகோணம் மாநகராட்சி**

**இணைப்பு** : பொருள்களில் நிரல்
**பெறுநர்** : **அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
**நகல்** :

1. பாராளுமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை
2. மாநிலங்களவை உறுப்பினர்
3. சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்
4. அனைத்து நாளிதழ்கள்

| <u>மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</u><br>23.06.2026ம் | **ஜூன் மாதம் அவசரக்கூட்ட தீர்மானம்<br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்** | **மாமன்ற தீர்மான எண்** |
|---|---|---|
| | **<u>இரங்கல் தீர்மானம்:</u>**<br>கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் அவர்கள் கீழ்கண்டவாறு இரங்கல் தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கும்பகோணம் நகராட்சியில் மன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி தற்போது மறைவெய்தியுள்ள திரு.A.கணேசன் அவர்களுக்கு இம் மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.<br>மேற்கண்ட தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 506<br>இரங்கல் தீர்மானத்தினை வணக்கத்துக்குரிய துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |
| | **<u>இரங்கல் தீர்மானம்:</u>**<br>கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் அவர்கள் கீழ்கண்டவாறு இரங்கல் தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>கடந்த 21.06.2026-ஆம் நாள் அன்று திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் கன்னிகைபேர் என்ற கிராமத்தில் அமைந்துள்ள ஏற்றுமதி ஆலையில் அமோனியம் வாயு கசிவு காரணமாக ஏற்பட்ட விபத்தில் 7 பெண்கள் உயிரிழந்துள்ளனர். இத்துயர சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இம் மாமன்றம் தெரிவித்துக்கொள்கிறது.<br>மேற்கண்ட தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 507<br>இரங்கல் தீர்மானத்தினை வணக்கத்துக்குரிய துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |
| | **பொருள் எண்.1**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-4 வார்டு எண் 24 பிடாரி குளம் அருகில் வணிக வளாகம் மறு மேம்பாடு செய்யும் பணியினை ரூ.10.70. கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கி புதிதாக வணிக வளாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது இவ்வணிக வளாகம் பணி முடிவுற்ற நிலையில் இந்த வணிக வளாகத்தை திரு.G.சரவணகுமார் என்பவர் ஏலம் எடுத்துள்ளார். அதில் எலதரர் குத்தகை இனத்திற்கு செலுத்த வேண்டிய முன் வைப்புத்தொகை ரூ.5.45 கோடியில் ரூ.3.25 கோடி வைப்புத்தொகை செலுத்தி உள்ளார். மேலும் ரூ.2.20 கோடி முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டி உள்ளது. இந்த ஏலத்தின் மூலம் மாநகராட்சிக்கு மாதம் ரூ.14,54,004/- வீதம் வருடத்திற்கு ரூ.1,74,48,048 வருவாய் ஈட்டப்படவேண்டும். இந்த நிலையில் ஏலதாரர் வணிக வளாகத்திற்கு உயர் அழுத்த மின்மாற்றிகள் மற்றும் உபகரணங்கள் (700 KVA), தீயணைப்பு உபகரணங்கள் அமைத்து தருமாறு கோரியுள்ளார். எனவே இந்த உயர் அழுத்த மின்மாற்றிகள் மற்றும் உபகரணங்கள் (700 KVA), தீயணைப்பு உபகரணங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 கோடி.(ரூபாய் ஒரு கோடி ஐம்பது இலட்சம் மட்டும்). மேற்கண்ட பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண். 9231/2023/E1** | 508<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| | **பொருள் எண்.2**<br>கும்பகோணம் மாநகராட்சி - மண்டலம்-4- வார்டு எண் 24ல் பிடாரிக்குளம் அருகில் பழைய மீன் மார்க்கெட் இடத்தில் CGF 2023-2024 திட்டத்தின் கீழ் புதிதாக வணிக வளாகம் கட்டும் பணி ரூ.10.70 கோடிக்கு G.O (D) No.555 MAWS Dept.(MC6) , dated 22.09.2023 அரசாணையின் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் போது அடித்தள | 509<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |

கட்டுமானத்தில் (Pile Foundation) பணியானது மண்ணின் தன்மைக்கேற்ப மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள ஆழத்தினை விட அதிகமாக மேற்கொள்ள வேண்டிய அவசியமானதை பேராசிரியர், அண்ணா பல்கலைகழகம், பட்டுக்கோட்டை அவர்களின் மண் சோதனை மற்றும் மண் வடிவமைப்பு அறிக்கைக்கேற்ப மாற்றப்பட்டுள்ளது. இதனால் மதிப்பீட்டின் அடித்தள கட்டுமான இனங்களில் கம்பி மற்றும் கான்கீரீட் அளவு கூடுதலாக செலவிடப்பட்டமைக்கு தலைமை பொறியாளர் ,நகராட்சி நிர்வாக இயக்குநரகம்.சென்னை அவர்களிடம் பணிசீட்டு (Work slip) பெறப்பட்டுள்ளது. தற்போது கட்டிடம் முடிக்கப்பட்ட நிலையில் கட்டிடத்தினை அதிக விலை ஏலத்திற்கு எடுத்த ஏலதாரர் கடிதத்தின் படி உயர்மின்னழுத்த (HT) பயன்பாடு காரணமாக 700 KVA திறன் கொண்ட மின் இணைப்பு வேண்டி உள்ளதாலும், மதிப்பீட்டில் மின் இணைப்புகான இனங்கள் இல்லை என்பதாலும்,மின் இணைப்புக்கான உத்தேச மதிப்பீடு ரூ.150.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் பணி முடிவறிக்கை (Completion report) தயார் செய்ய வேண்டிய நிலையில், நகராட்சி நிர்வாக துறை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய 2.5 சதவீதத் தொகை ரூ.26,75,000/- கட்டுமான சேவைக் கட்டணம் (Centage charge) செலுத்தவும் மேலும் பணி முடிவடைந்து இறுதி பட்டியல் (Final bill) தயார் செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை விடுவிக்க வேண்டி இருப்பதாலும் இப்பணிக்கு பணிசீட்டு (Work slip) தாயரிக்கும் போது மதிப்பீட்டை விட உள்ளதால் பணி முடிவுற்ற நிலையில் , மாநகராட்சிக்குண்டான கட்டிடத்தை வருவாய் ஈட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரகம் , நக எண்2846/2023/இ2 , நாள் 03.11.2025 - ல் அளித்த கடிதத்தின் படி பணி ஒப்பந்த தொகையில் 5 சதவிகிதத்தை ரூ.53,43,548.05 /- (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சத்தி நாற்பத்தி மூன்றாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தி எட்டு மட்டும்) மாநகராட்சி பொது நிதியின் மூலம் தொகை வழங்குவதற்கும்,பணிகள் மேற்கொள்ளபட்டமைக்கும் பின்னேற்பிற்கும் மாமன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதியும், பின்னேற்பும் வழங்கலாம்.

**ந.க.எண். 9231/2023/E1**

**பொருள் எண்.3**

மாமன்றத் தீர்மான எண்.356. நாள்.27.02,2025-ல் கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம், காளியம்மன் கோயில்தெருவில் உள்ள வணிகவளாகம் Ward No.6, Block No.8 சர்வேஎண்.TS.No.353,354,2383,2384 உள்ள இடத்தில் வணிகவளாக கட்டிடங்கள் ரூ.22.69 கோடியில் கட்டப்பட்டு வரப்படுகிறது. அவ்வணிக வளாகத்தினை குத்தகை மூலம் ஒப்படைப்பதற்கு முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி (Pre Auction/Pre Tender) மூலம் முன்வைப்புத்தொகை பெற்று கட்டிடம் கட்டி முடித்தப்பின் ஒதுக்கீடு செய்திட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் (சென்னைபிரசுரம்உட்பட) விளம்பரம் செய்யப்பட்டது.

| வ. எண் | பகுதி | சர்வே எண் | கட்டிடம் விபரம் | தளம் வாரியாக அளவு | குத்தகை இனத்திற்கு செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை ரூ.இலட்சத்தில் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளியில் கலந்துகொள்ள செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலையம் காளியம்மன்கோயில் தெருவில் உள்ள வணிக வளாகம். | TS NO. 353, 354, 2383, 2384 WARD NO.6 BLOCK NO.8 | தரைத்தளம்<br>முதல்தளம்<br>இரண்டாம் தளம்<br>கூடுதல்<br><br>இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடும் நான்கு சக்கரவாகன நிறுத்துமிடம். | 20534 ச.அடி<br>19057 ச.அடி<br>19057 ச.அடி<br><br>58648 ச.அடி<br><br>20534 ச.அடி. | வணிக வளாகம் முழுவதும் கோருபவர்களுக்கு வைப்புத் தொகை ரூ.1150 இலட்சம். | ரூ.300 இலட்சம். |

முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துக்கொண்டவர்களின் விவரம்

510

**அனுமதி வழங்கப்பட்டது**

| வ. எ ண் | தேதி | பெயர் மற்றும் முகவரி | முன் ஒப்பந்தப்புள்ளி தொகை | முன் ஏலத் தொ கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 20/12/2024 | முன்ஏலம் /முன் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை | | | மறு முன்ஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 2. | 27/12/2024 | முன்ஏலம் /முன் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை | | | மறு முன்ஏலம்/மறு முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 3. | 03/01/2025 | முன்ஏலம் /முன் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வராததால் வைப்புத் தொகை ரூ.950 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது. | | | வைப்புத் தொகை ரூ.950 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டு மறு முன் ஏலம்/மறு முன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது. |
| 4. | 10/01/2025 | முன் ஏலம் /முன் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வராததால் வைப்புத் தொகை ரூ.850 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது. | | | வைப்புத் தொகை ரூ.850 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டு மறு முன்ஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது. |
| 5. | 22/01/2025 | முன்ஏலம் /முன் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வரவில்லை | | | மறு முன்ஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 6. | 29/01/2025 | M/S ஆதிகாலத்து அலங்காரமா ளிகைபுதுக் கோட்டை | ரூ.18.50 இலட்சம் மாத வாடகை | - | மறு முன்ஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 7. | 05/02/2025 | M/S ஆதிகாலத்து அலங்காரமா ளிகை புதுக்கோட்டை | ரூ.20.50 இலட்சம் மாத வாடகை | - | மறு முன்ஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது |
| 8. | 14/02/2025 | M/S ஆதிகாலத்து அலங்காரமா ளிகை புதுக்கோட்டை | ரூ.20.75 இலட்சம் மாத வாடகை | - | - |

20.12.2024 அன்று முன் ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை.
27.12.2024 அன்று இரண்டாவது முறை முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.
03.01.2025 அன்று மூன்றாவது முறை முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.
10-01.2025 அன்று நான்காவது முறைமுன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.
22.01.2025 அன்று ஐந்தாவது முறை முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.
29.01.2025 அன்று ஆறாவது முறை முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை வணிகவளாகம் முழுவதும் குத்தகைக்குகோரி M/S.ஆதிகாலத்து அலங்காரமாளிகை புதுக்கோட்டை நிறுவனத்தார் ரூ.18.50/- இலட்சம் மாத உரிமம் என குறிப்பிட்டு ஒருவர்மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தார். ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக இருந்ததால் மீண்டும் 05.02.2025 அன்று ஏழாவதுமுறையாக முன்ஏலம்/முன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

05.02.2025 அன்று மறுஏலம்/மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முன்ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை வணிகவளாகம் முழுவதும் குத்தகைக்கு கோரி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.ஆதிகாலத்து அலங்காரமாளிகை புதுக்கோட்டை நிறுவனத்தார் மாதஉரிமம் ரூ.20.50/- இலட்சம் என குறிப்பிட்டு ஒருவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தார்.

14.02.2025 அன்று மேலும் ஒரு முறை எட்டாவது முறையாக மறுமுன்ஏலம்/ மறுமுன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ள முன்வரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வணிகவளாகம் முழுவதுமாக கோரி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.ஆதிகாலத்து அலங்காரமாளிகை புதுக்கோட்டை நிறுவனத்தார் மாதஉரிமம் ரூ.20.75/- இலட்சம் என குறிப்பிட்டு ஒருவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேற்கண்டவாறு உயர்ந்தப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக மாதஉரிமம் ரூ.20,75,000/- என்று குறிப்பிட்டுள்ள தொகையானது ஒருவருடத்திற்கு ரூ.2,49,00,000/- ஆகும். மாதஉரிம தொகையுடன் GST 18%சேர்த்து ரூ.3,73,500/- செலுத்தும் பட்சத்தில் மாதஉரிமம் ரூ.24,28,500/- ஆகும்.

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்பது குறித்தும் மீதமுள்ள வைப்புத் தொகையினை செலுத்துவதற்கும் கூடுதல் நிபந்தனைகள் விதித்து ஆணையர் கும்பகோணம் மாநகராட்சி அவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்ள அதிகாரம் அளித்தும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு குத்தகைதாரர் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்.<br>1. 30/01/2025 அன்று வைப்புத் தொகை – ரூ.3,00,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>2. 27/03/2025 அன்றுவைப்புத்தொகை – ரூ.50,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>3. 08/05/2025 அன்று வைப்புத்தொகை – ரூ.1,00,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>4. 16/07/2025 அன்று வைப்புத் தொகை– ரூ.50,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>5. 15/09/2025 அன்றுவைப்புத் தொகை – ரூ. 50,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>6. 01/11/2025 அன்றுவைப்புத் தொகை – ரூ. 50,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>7. 18/03/2026 அன்றுவைப்புத்தொகை– ரூ. 1,00,00,000/– செலுத்தப்பட்டுள்ளது<br>செலுத்த வேண்டிய மீதமுன் வைப்புத் தொகை–ரூ. 1,50,00,000/–(ரூபாய் ஒருகோடியே ஐம்பது லட்சம்)<br>மாதஉரிமத் தொகை – ரூ. 20,75,000/–.<br>ஒருவருட குத்தகை தொகை – ரூ. 2,49,00,000/–<br>இந்நிலையில் ஆதிகாலத்து M/S.ஆதிகாலத்து அலங்காரமாளிகை புதுக்கோட்டை, குத்தகைதாரர் கீழ்கண்ட வசதிகளை செய்துதரக்கோரி கடிதம் அளித்துள்ளார்கள்.<br>1. வணிக வளாகத்திற்கு 700 – KVA–HT Electrical connection –மின்இணைப்பு வசதி செய்துதரக் கோரியுள்ளனர்.<br>2. வணிக வளாகத்திற்கு 1 lakhs Ltrs capacity needed for fire completion/ clearance.<br><br>மேற்கண்டவாறு கோரியுள்ள வசதிகள் அத்தியாவசமாக உள்ளதால்,700 KVA திறன் கொண்ட உயர்அழுத்தமின் மாற்றிகள் மற்றும் உபகரணங்கள் அமைக்க தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 கோடி (ரூபாய் ஒருகோடி ஐம்பது இலட்சம் மட்டும்) செலவினத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மேலும் வணிக வளாகத்திற்கு தீயணைப்பு வசதிகள் செய்ய 1 lakhs Ltrs தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி தேவைப்படும் நிலையில் மதிப்பீட்டில் அடங்கியுள்ள 40 கி.லிட்டர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 60 கி.லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கதொட்டியை அமைத்து குத்தகைதாரரிடம் ஒப்படைக்க ஏதுவாக விரைவில் இப்பணியினை முடித்து மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டுவதற்கு வழிவகை ஏற்படும் என்பதால் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்.**<br>**ந.க.எண். 5663/2023/E2** | |
| **மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 23.06.2026ம்** | **ஜூன் மாதம் சாதாரணக்கூட்ட தீர்மானம்<br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்** | **மாமன்ற தீர்மான எண்** |
| | **பொருள் எண்.1**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்–14ல் குட்டியான் தெருவில் இருந்து E.B.காலனி செல்லும் வழியில் உள்ள வாய்க்கால் மீது உள்ள கல்வெர்ட்டில் ஒரு பகுதி சேதமடைந்து அந்த வாய்க்காலில் விழும் நிலையில் உள்ளது. கல்வெர்ட்டின் மேல் அமைந்துள்ள சாலை மற்றும் RCC Deck Slab ஒரு பகுதி பெயர்ந்து விட்டது எனவே பொது மக்கள் நலன் கருதி அந்த கல்வெர்ட்டை மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.50 (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட மதிப்பீட்டை வருவாய் நிதியின் 2026–2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.** 4417/2026/E2 | 511<br>அனுமதி வழங்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.2**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு–11ல் அமைந்துள்ள குழந்தைகள் நினைவு பூங்காவில் பசுமையான மரங்கள் மற்றும் அழகு செடிகள் அமைந்துள்ளன. தற்சமயம் வெயில் என்பதாலும் புது மரக்கன்றுகள் நடபட்டுள்ளதாலும் தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. மேலும், மின்சார வசதியும் இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதை தடுக்கும் பொருட்டு மின் வசதி தேவைப்படுகிறது. அதே போல் சுற்றுச் சுவர் மற்றும் அதன் மேல் அமைப்பட்டுள்ள வேலி கம்பிகள் சேதம் அடைந்துள்ளது. மேல், குறிப்பிட்ட அனைத்து பராமரிப்பு பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட மதிப்பீட்டை வருவாய் நிதியின் 2026–2027 கீழ் செலவினம் 1. செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4418/2026/E2** | 512<br>அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.3**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தேப்பெருமாநல்லூர் உர கிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படும் அபாயம் நிலவி வருகிறது. இதனால் பொது மக்களுக்கு காற்று மாசு ஏற்படாமல் இருக்கவும், உர கிடங்கில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு நீர்முனை(Fire–Hydrant) அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 28.00 (ரூபாய் இருபத்தெட்டு இலட்சம் மட்டும்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>**1)** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2)** மேற்கண்ட மதிப்பீட்டை வருவாய் நிதியின் 2026–2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்..<br>**ந.க.எண்.4420/2026/E2** | 513<br>அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.4**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தேப்பெருமாநல்லூர் உர கிடங்கில் அடிக்கடி தீ விபத்து ஏற்படும் அபாயம் நிலவி வருகிறது. இதனால் பொது மக்களுக்கு காற்று மாசு ஏற்படாமல் இருக்கவும், உர கிடங்கில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 16.40 (ரூபாய் பதினாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட மதிப்பீட்டை வருவாய் நிதியின் 2026–2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4421/2026/E2** | 514<br>அனுமதி வழங்கப்பட்டது . |
| | **பொருள் எண்.5**<br>கும்பகோணம் மாநகராட்சி – மண்டலம்–2– வார்டு எண் 22, டவுன் விரிவாக்கத்தில் (காந்தி நகர்) உள்ள ஆணையர் (காந்தி நகர்) குடியிருப்பில் மராமத்து பணிகள் மற்றும் முதல் தளத்தில் GI ஷீட் மேற்கூரை அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,30,000 (ரூபாய் ஒன்பது இலட்சத்தி முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 5264/2026/E2** | 515<br>அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.6**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்–5ல் உள்ள பெருமாண்டி நுண் உர மையத்தில் உர தொட்டிகளில் தளம் பழுதுபார்த்தல், உர தொட்டியை சுற்றி அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் பழுது, எலக்ட்ரிக் சுவிட்ச் போர்டு மற்றும் மெயின் போர்டு பழுது பார்த்தல் போன்ற புனரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.75 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 516<br>அனுமதி வழங்கப்பட்டது . |

<table>
<tr>
<td></td>
<td>அலுவலக குறிப்பு<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>2) மேற்கண்ட மதிப்பீட்டை வருவாய் நிதியின் 2026–2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4424/2026/E2</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண்.7<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் சோழன் நகர், சோலையப்பன் தெரு, வடக்குடியான் தெரு, பாணாதுறை, செந்தில்நாதன் நகர், ஸ்ரீநிவாசன் நகர் , மாதுளம்பேட்டை மற்றும் நேரு காலனி உந்து நிலையங்கள் ( Pumping Stations) , ஜான் செல்வராஜ் நகர் பாரத் நகர் மற்றும் எல், பி. எஸ் ரோடு தூண்டும் நிலையங்கள் ( Lifting Stations) பிரதான குழாய்கள்( Pumping Main) கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள்( Sewer Line) , இயந்திர குழிகள் பராமரிப்பு பணிக்கு 5 மாத காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 99.75 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று (தீர்மான எண் 754 நாள்.29.08.2023)–ல் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s InFraEN (India) Private Limited நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் 31.07.2024 அன்றுடன் முடிவடைந்துள்ளதால் மேற்படி பணிக்கு நிர்வாக நலனை முன்நிறுத்தியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தின் மூலம் செயல்பாட்டு திறனின் அடிப்படையில் ( performance Index) கணக்கீடும் பணி நடைமுறையில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கையில் இருப்பதால் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதே ஒப்பந்ததாருக்கு கீழ்க்கண்டவாறு<br>5 மாத காலத்திற்கு ( 01.08.2024 முதல் 31.12.2024 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.99.75 இலட்சத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் .22.07.2024 மாமன்ற தீர்மான எண் .228 நாள் 29.11.2024.<br>மூன்று மாத காலத்திற்கு (01.01.2025 முதல் 31.03.2025 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 296 நாள் 30.12.2024<br>மூன்று மாத காலத்திற்கு (01.04.2025 முதல் 30.06.2025 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 408 நாள் 28.3.2025<br>மூன்று மாத காலத்திற்கு (01.07.2025 முதல் 30.09.2025 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 65 நாள் 30.6.2025<br>மூன்று மாத காலத்திற்கு (01.10.2025 முதல் 31.12.2025 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.60,00 இலட்சத்திற்கு மாமன்ற பொருள் தீர்மான எண். 228 நாள் 30.09.2025<br>5 மாத காலத்திற்கு ( 01.01.2026 முதல் 31.05.2026 வரை) மதிப்பீட்டுத் தொகை ரூ.60.00 இலட்சத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் . 15.02.2025 மாமன்ற தீர்மான எண் .458 நாள் 25.02.2026.<br>மேற்கூறியவாறு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மீண்டும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.05.2026 அன்றுடன் முடிவடைய உள்ளதால் மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தின் மூலம் செயல்பாட்டு திறனின் அடிப்படையில் (performance Index) கணக்கிடும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை முடிவடையமல் இருப்பதால் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதே ஒப்பந்ததாரர், M/s InFraEN (India) Private Limited கொண்டு அதே விலை விகித்தில் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மேலும் 2.5 மாத காலத்திற்கு (01.06.2026 முதல் 10.08.2026) வரை ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள பணியின் அவசரம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி நாள். 15.05.2026 அன்று அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.49.00 குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–2027ன் கீழ் செலவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு M/s InFraEN (India) Private பணி மீண்டும் அதே ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>ந.க எண். 9014 /2024/இ2</td>
<td>517<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>பொருள் எண்.8<br>கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –3 ல் உள்ள வார்டு எண் 31 முதல் 35 வரையிலான தாராசுரம் பகுதிகளுக்கு தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு ஆகும் தோராய மதிப்பீடு ரூ. 4.00 (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1) மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியின் 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4372 /2026/இ2</td><td>518<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.9<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –3 க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்பு சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் .<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந .க .எண்.4533/2026 /இ2</td><td>519<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது .</td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.10<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –3 க்குட்பட்ட பகுதிகளில் பாதாளசாக்கடை நீருந்து நிலையங்களில் இருந்து வரும் பிரதான குழாய்களில் உடைப்பு சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் .<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந .க .எண்.4534 /2026 /இ2</td><td>520<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது .</td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.11<br>கும்பகோணம் மாநகராட்சியில் 48 வார்டுகளில் கசடு கழிவுகள் (Septage Management) மேலாண்மை தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணை (நிலை) எண் 183 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) நாள் 31.12.2022–இன் படியும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2023, விதியின்படியும் மாமன்றத்தில் மாமன்ற தீர்மானம் எண் 427 நாள் 30.01.2023ல் பதிவு செய்யப்பட்டது. மேலும் இத்தீர்மானத்தின்படி தனியர் லாரி உரிமையாளர் வாகனங்களுக்கு 2023 ஆண்டு முதல் ஒரு வருடமும் மார்ச் மாதத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட ஏப்ரல் மாதத்தில் பதிவு செய்து உத்திரவு அளித்து கசடு கழிவுகள் இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கரிகுளம் உள்ள அதற்கு உரிய இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசாணை எண்ணில் கீழ்க்கண்டுள்ள விபரப்படி கசடு கழிவுகள் கரிக்குளத்தில் கொட்ட தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விவரம்</th><th>கட்டணம் தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>உரிமக்கட்டணம்/புதுப்பித்தல் கட்டணம்</td><td>2000.00</td></tr>
<tr><td>2</td><td>6000 லிட்டர் கீழ் கழிவு நீர் கட்டணம்</td><td>200.00</td></tr>
<tr><td>3</td><td>6000 லிட்டர் மேல் கழிவு நீர் கட்டணம்</td><td>300.00</td></tr>
<tr><td>4</td><td>உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம்</td><td>ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 முதல் 31 தேதி வரை</td></tr>
</table>
எனவே, மேற்கண்ட விவரப்படி பதிவுக் கட்டணம் பெறவும், கசடு கழிவுகள் கொட்டுவதற்கான கட்டணம் பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க. எண் 639 /2021 /இ4</td><td>521<br>அனுமதி அளிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

**பொருள். எண் 12**

கும்பகோணம் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்–1ல் உள்ள வார்டு 1 முதல் 6 வரை மற்றும் 11 முதல் 16 வரை ஆகிய பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் கொண்டு செல்லும் பிரதானக்குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்பு சரி செய்யும் பணிக்கு தயார் செய்யபட்டுள்ள மதிப்பீடு ரூ.10.00/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

2) மேற்கண்ட மதிப்பீட்டை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–27 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.

**ந .க .எண் 4535 /2026/இ2**

</td>
<td>

522

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

</td>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள். எண்.13**

கும்பகோணம் மாநகராட்சியில் புதியதாக கட்டபட்ட 4 மண்டல அலுவலகங்களுக்கு மற்றும் மாமன்ற கூட்டரங்குகளின் மேற்கூரைகளில் Solar panel அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு கலந்தாலோசகர் நியமித்தல் பணிக்கு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடமிருந்து 11.12.2025 அன்று அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட அட்டவணையின் படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவாக கொடுத்த M/s. RD ECO Solutions , Sirkazhi என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை %.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>அதிகம் /குறைவு</th></tr>
<tr><td>1</td><td>M/s RD ECO Solutions</td><td>திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.50 %</td><td>திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.45 %</td><td>(–) 0.05 % குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s DM Solutions</td><td>திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.50 %</td><td>திட்டமதிப்பீட்டுத் தொகையில் 1.60 %</td><td>(+) 0.10 % அதிகம்</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் செலவினை திட்டநிதியில் செலவு செய்ய அனுமதி கோரலாம்

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட (–) 0.05 % குறைவாக கொடுத்த M/s. RD ECO Solutions, Sirkazhi என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ந,க எண், 013139 /2025/இ2**

</td>
<td>

523

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

</td>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண். 14**

கும்பகோணம் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்–1ல் உள்ள வார்டு 1 முதல் 6 வரை மற்றும் 11 முதல் 16 வரை ஆகிய பகுதிகளில் உள்ள தார் மற்றும் சிமெண்ட் சாலைகளின் தரைமட்டத்திற்கு கீழ் இருக்கும் இயந்திரக் குழிகளை உயர்த்தி கட்டவும் அவ்வப்போது இயந்திர குழி பழுதினை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.00(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

2) மேற்கண்ட மதிப்பீட்டை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–27 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.

**ந .க .எண் 4536 /2026/இ2**

</td>
<td>

524

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

</td>
</tr>
<tr>
<td></td>
<td>

**பொருள் எண்..15**

கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–2 Dr.மூர்த்தி ரோடு பழைய மாநகராட்சி அலுவலக வளாகம் மற்றும் பாணாதுறை நுண் உரமாக்கும் மையத்தை புணரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td>
<td>

525

அனுமதி வழங்கப்பட்டது

</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண்.4634/2026.இ2** | |
| | **பொருள் எண்..16**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –4கில் உள்ள வார்டுகளில் உள்ள தெருக்களில் அமைந்துள்ள இயந்திரகுழிகளின் மூடிகளை உயர்த்தும் பணி மற்றும் பழுதடைந்துள்ள இயந்திரகுழிகளை சீர்செய்ய ஆறுமாதக்காலத்திற்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவீனத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதி2026–27–ன் கீழ் செவ்வினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.7184/2026.இ2** | 526<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.17**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–2 இல் உள்ள வார்டுகளில் உள்ள தெருக்களில் அமைந்துள்ள இயந்திரக் குழிகளின் மூடிகள் மாற்றும் பணி மற்றும் பழுதடைந்த இயந்திரக் குழிகளை எதிர்வரும் ஒரு வருடக் காலத்திற்கு சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2.இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின்கீழ்மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண்.4635/2026/E2** | 527<br>அனுமதி<br>வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.18**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–2 க்கு உட்பட்ட மாட்டு கொட்டகை, பழைய பேருந்து நிலையம் மற்றும் ஸ்ரீநகர் காலனி மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் ஏற்படும் சிறு பழுதுகள், valve மாற்றுதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.50 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண்.4636/2026/E2** | 528<br>அனுமதி<br>வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.19**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்–20 பாரத் நகர் நுண் உரமாக்கும் மையத்தை புணரமைக்கும் பணி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க.எண்.4637/2026/E2** | 529<br>அனுமதி<br>வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.20**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –3 க்குட்பட்ட வார்டு எண். 38 ஏ.ஆர்.ஆர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் உள்ள சுற்றுச்சுவரை இடித்துவிட்டு புதியதாக கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் .<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்வி நிதியின் 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.4633/2026/இ2** | 530<br>அனுமதி அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.21**<br>கும்பகோணம் மாநகராட்சியில் உள்ள 42000 சொத்துவரி உரிமைதாரர்களுக்கு 2026-2027ஆண்டிற்கானசொத்து வரி, குடிநீர் கட்டணம், புதை வடிகால் சேவை கட்டணம் தொழில்வரி, மற்றும் காலிமனை வரி, ஆகியவற்றை செலுத்த கோரி பொதுமக்களின் அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு குறுஞ்செய்தி (SMS) 300000 எண்ணிக்கைக்கு HITRENDY SOFTWARE AND INFRASTRUCTURE PRIVATE LIMITED , TRICHY அவர்களின்குறைந்த விலைப்புள்ளி 22.05.2026,ரூ.1,94,700/-என்ற விலை புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. எனவே, அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கும், விலைப்புள்ளித் தொகையினை முன்னரே வழங்கப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கப்பட்டது<br>**ந.க.எண்.அ1/241/2024** | 531<br>அனுமதி அளிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.22**<br>கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான தேப்பெருமாநல்லூர் உரக்கிடங்கு மற்றும் தாராசுரம் குப்பைக் கிடங்கு ஆகியவற்றில் உள்ள 69729 மெட்ரிக் டன் (87161.25 கன மீட்டர்) குப்பைகளை உயிரி செயலாக்க முறையில் பிரித்தெடுத்து நிலம் மீட்டெடுக்கும் பணிக்கு 19.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் தன்ஷித் டிரேடிங் ஏஜென்சி, திருச்சி நிறுவனத்தாருக்கு 05.02.2026 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தேப்பெருமாநல்லூர் உரக்கிடங்கு மற்றும் தாராசுரம் குப்பைக் கிடங்குகளில் உள்ள குப்பைகளை அளவீடு செய்வதற்கு சென்னை அண்ணா பல்கலைக் கழகம் மூலம் அளவீடு மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.11,46,960/-ஐ மேற்கண்ட பல்கலைக்கழகத்திற்கு வழங்கி பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:** 1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தினை மாநகராட்சி வருவாய் நிதி 2026-27-இன் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>**ந.க. எண் 12952 /2025 /இ4** | 532<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.23**<br>கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண்-21 SRVS ரோடு ஸ்ரீநகர் காலனி சந்திப்பில் உள்ள பழுதடைந்த பாதாள சாக்கடை ஆய்வு குழி மற்றும் கழிவு நீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.10 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1)மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2)இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்<br>**ந.க. எண் 4933 /2026 /E2** | 533<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |
| | **பொருள் எண்.24**<br>கும்பகோணம் மாநகராட்சி உட்பட்ட மண்டலம்-2, வார்டு எண் 18ல் உள்ள சரவணதோப்பில் கழிவுநீர் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் புதியதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3.50 இலட்சம் (ரூபாய் மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>**ந.க. எண் 4932/2026 /E2** | 534<br>அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
பொருள் எண்.25<br>
கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட வார்டு எண் 36 கோபுசிவகுருநாதர் பள்ளி அருகில் இயங்கி வரும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்கான சமையலறையின் வெளிப்புறம் தாழ்வாக உள்ளதால் சாப்பாடு ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வெளியே செல்வதற்கு சிரமமாக உள்ளது. மேலும் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு உணவு வழங்கும் வகையில் திட்டம் விரிவுபடுத்தியதனால் சமயலறையில் போதிய இட வசதி இல்லாததால் சமையலறைக்கு வெளியே ஷெட் அமைக்கவும், தாழ்வாக உள்ள இடத்தை உயர்த்தி சிமெண்ட் தளம் அமைத்திடவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.25 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்வி நிதி 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>
ந.க .எண்: 4943 /2026 /இ2
</td>
<td>535<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
பொருள் எண்.26<br>
கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –3க்குட்பட்ட வார்டு எண்.31 முதல் 35 வரை டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு பணியின் அவசியம் அவசரம் கருதி அனுமதிக்கு.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2026–2027ன்கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.<br>
ந .க .எண்: 4944 /2026 /இ2
</td>
<td>536<br>அனுமதி அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
பொருள் எண்.27<br>
கும்பகோணம் மாநகராட்சியின் ஒப்பந்த பணிகள் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்ட பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்பு தொகை கீழ்கண்டவாறு திரும்ப வழங்க கோரி விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டின் ப.எண்./வ.எண்.</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>SRINIVAS CONSTRUCTION</td><td>தொகுதி 7/57</td><td>481504</td></tr>
<tr><td>2</td><td>SRINIVAS CONSTRUCTION</td><td>தொகுதி 7/75</td><td>422082</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>903586</td></tr>
</table>
மேற்படி தொகை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருந்த வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு.<br>
அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண்.8195/2026/பி1
</td>
<td>537<br>அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>
பொருள் எண்.28<br>
தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 ஏப்ரல் 01, 2026 முதல் அமலுக்கு வந்துள்ளன. அதனை திறம்பட செயல்படுத்தும் பொருட்டு மாண்பமை உச்சநீதிமன்றம் சிவில் மேல்முறையீட்டு வழக்கு எண். 6174. 2023 பிப்ரவரி 19, ஏப்ரல் 29 மற்றும் மே 5 2026 – ல் தெரிவித்துள்ளபடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பிரதிநிதிகளான வணக்கத்திற்குரிய மேயர், வணக்கத்திற்குரிய துணை மேயர் மற்றும் மாநகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை குப்பைகளை உருவாக்கும் இடத்திலேயே பிரித்தல் குறித்த கல்விக்கான முதன்மை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உலக சுற்றுச்சூழல் தினமான 2026 ஜீன் 5 – ந்தேதி முதல் 2026 ஜீன் 12 வரையிலான ஒரு வார காலத்திற்கு விழிப்புணர்வு, பரிந்துரை மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மூலம் திடக்கழிவுகளை 4 வகையினங்களாக பிரித்தல், பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவதை தடுத்தல், மற்றும் குப்பைகள் எரிப்பதை முற்றிலுமாக தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வை வீடு வீடாக சென்று ஏற்படுத்துவது குறித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பொறுப்பு நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
</td>
<td>538<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**அலுவலக குறிப்பு**

அ) அனுமதி அளிக்கலாம்,

(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்

**ந.க.எண். 4947 /2026/எச்1**

---

**பொருள் எண்.29**

கும்பகோணம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்படும் TN68Z 3863 (TATA ACE ) பழுது நீக்கம் மற்றும் தகுதி சான்று தர வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு மாமன்ற தீர்மான எண். 408 நாள்.25.02.2026 – ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சிவ சக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம். | ரூ. 224554/- |
| 2 | தமிழ் நாடு ஆக்ரோ சர்விஸ் சென்டர், 1-A/12, பைபாஸ் ரோடு, திருவாரூர். | ரூ. 247682/- |
| 3 | அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | ரூ. 236590/- |

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்,

(ஆ) குறைந்த விலை விகித விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ் தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்..

**ந.க.எண். 1954/2026 / எச்.1**

539

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

---

**பொருள் எண்.30**

கும்பகோணம் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்படும் TN68Z 1726 (Tipper ) பழுது நீக்கம் மற்றும் தகுதி சான்று தர வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு மாமன்ற தீர்மான எண். 408 நாள்.25.02.2026-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **விலைப்புள்ளி தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1 | M/S. பெர்ஃபெக்ட் ஆட்டோ இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 602/1, கோவை புறவழி சாலை, எஸ்.பி.ஐ காலனி, சேலம் – 636 004. | 3,84,750/- |
| 2 | M/S. ஜஹாங்கீர் மோட்டார் ஒர்க்ஸ், 208 –c, கூகை, எருமாபாளையம், சேலம் – 636 015. | 3,98,850/- |
| 3 | M/S. ஸ்ரீ ஜோதிமுருகன் ஆட்டோ ஒர்க்ஸ், சங்கர் நகர், சேலம் – 636 007. | 4,03,550/- |

**அலுவலக குறிப்பு**

(அ) அனுமதி அளிக்கலாம்,

(ஆ) குறைந்த விலை விகித விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S.பெர்ஃபெக்ட் ஆட்டோ இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 602/1, கோவை புறவழி சாலை, எஸ்.பி.ஐ காலனி, சேலம் – 636 004. நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண். 4246/2026 / எச்.1**

540

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.31**<br>இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்த வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்திட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரால் செயல்முறைகள் ந.க.எண்.35883/2022/EA1-SWM-18 நாள்.23.02.2023-ல் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சி தீர்மானம் எண்.476 நாள்.03.03.2023-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மெஸர்ஸ் சரம் என்விரோ சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மாமன்ற தீர்மான எண்.601 நாள்.26.06.2023-ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு ஒரு டன்னுக்கு ரூ.4050/- என்ற விலைப்புள்ளியில் பணி உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. சம்மந்தப்பட்ட நிறுவனத்தின் சம்மத கடிதத்தின் அடிப்படையில் 01.07.2024 முதல் 30.06.2025 வரை காலநீட்டிப்பு செய்து விலைப்புள்ளியில் 10% ரூ.405 சேர்த்து ரூ.4455 இப்பணிகள் நடைப்பெற்றது. தற்போது 01.07.2025முதல் 30.06.2026 முடிய காலநீட்டிப்பு செய்து ஒப்பந்த விதிகளின் படி விலைப்புள்ளியில் 10% ரூ.445.5 சேர்த்து ரூ.4900.5 என்ற விலைப்புள்ளியில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது ஒப்பந்தம் முடிவடைய உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதியும். நிர்வாக நலன் கருதியும், மேலும், இரண்டு மாத காலத்திற்கு 31.08.2026 – வரை கால நீட்டிப்பு செய்திட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரால் செயல்முறைகள் e-File No..DMA/1196/2026 SBM-2 Dated.02.06.2026-ல் அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, அதே ஒப்பந்த விலைப்புள்ளியில் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கவும் அதற்குண்டான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>அ) அனுமதி அளிக்கலாம்,<br>(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்<br>**ந.க.எண்.1896/2023/எச்1** | 541<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது |
| | **பொருள் எண்.32**<br>கும்பகோணம் மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள (களப்பணி மேற்கொள்ள) பொது சுகாதாரத் துறை மூலமாக வழிகாட்டு நெறிமுறைகளின் படி 153 – பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.669 நாள்.31.07.2023 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.962 நாள்.22.01.2024 அனுமதிபெறப்பட்டு குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸர்ஸ்.ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார்க்கு மூன்று மாத காலத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு கள பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் இப்பணியினை மேற்கொண்டு வரும் மெஸர்ஸ்.ஆர்.கே.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தார் மூலம் அதே விலை விகிதத்தில் மே, ஜீன் மற்றும் ஜீலை – 2026 ஆகிய மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.82,50,000-ற்கும் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. .<br>**அலுவலக குறிப்பு**<br><br>(அ) அனுமதி அளிக்கலாம்,<br>(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண். 5869/ 2023 / எச்.1** | 542<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது |

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**